1972 டிசம்பர் 15]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ரூ. 1,26,400 செலவில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட 79 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு நிலை எண் 847, ச. ந., நாள் 15—9—1972-ல் ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாண்டுக்குள் இவ்வேலை முடியுமென்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

திரு. கா. வேழவேந்தன் : முயற்சி எடுத்துக்கொண்டுள்ள முதல் அமைச்சர் அவர்களுக்கும் அரிசன நல அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளும்போது இந்த ஆண்டு இறுதிக் குள்ளாக அத் திட்டத்தை நிறைவேற்றித் தரமுடியுமா? இன்னும் கட்டட வேலை ஆரம்பிக்கப்படவில்லை. கடைகால் கூட போடபடவில்லை. ஆகவே இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவாவது அவற்றை முடிப்பதற்குரிய விதத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்க அரசு தனி உத்தரவு வழங்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த ஆண்டு என்றால் மார்ச் 31-ம் தேதி வரை இருக்கிறது. நிதி ஒதுக்கீடு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. அதற்குள் முடிவு அடையும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Harijan Welfare whether this method of constructing by Government houses destroyed by fire would be extended to other areas also?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மற்றயிடங்கள் தீ விபத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறதென்றால் அரசு பரிசீலித்து நிதி ஒதுக்கீடு செய்து புது வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 154, 195, எண் வினாக்கள் இரண்டும் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் வேண்டு கோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

சேலம் உருக்காலைத் திட்டம்

* 196 வின.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் உருக்காலைத் திட்டத்தின்கீழ் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை லட்சம் டன் உருக்கு உற்பத்தி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சேலம் உருக்காலைத் திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றுக்கு 1,95,000 டன்கள் கலப்பு, தனிரக எஃகு (Alloy and special steel) உற்பத்திச் செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது.

திரு. சோ. கருணைநாதன் : சேலம் உருக்காலைத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் முழு ஆதரவாக இருக்கிறதா அல்லது இடையூறாக இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தத் திட்டத்தை அவர்களே நிறைவேற்றுகிறார்கள்.

(சில உறுப்பினர்கள் அமைச்சர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்கள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரம் முடிகிற வரையில் அமைச்சர்களுக்குப் பின்னால் யாரும் உட்கார்ந்து பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, I would like to know the exact stage in which the Salem Steel Plant stands. Also, whether it is a fact that there is inordinate delay in its execution because of non-co-operation from the State Government in regard to acquisition of lands and other things ? Also whether it is a fact that the Central Government have asked for certain facilities from the State Government and whether the State Government have given all the facilities that have been sought by the Central Government? Also, may I know how many years it will take for the Plant to achieve full production?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநில அரசு மத்திய அரசு சண்டையாக சில அரசியல்வாதிகள் உருவாக்க விரும்புகிறார்கள். நில ஆர்ஜிதத்தைப் பொறுத்தவரை ஏற்கனவே விளக்கமாக இந்த மன்றத்தில் பதில் சொல்லியிருக்கிறேன். பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களைப் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே எடுக்க முயற்சி எடுத்திருக்கிறோம். எந்தெந்த நிலங்கள் வேண்டுமென்று சொல்லுகிறார்களோ அதை மட்டும் அப்போதைக்கப்போது இறுதியாக எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். எந்த விதமான குறைபாட்டையும் நில ஆர்ஜிதத்தைப் பொறுத்தவரையில் மத்திய

1972 டிசம்பர் 15]

அரசினர் சொல்லமாட்டார்கள் என்று கருதுகிறேன். இந்தத் தொழிற்சாலையை நிறுவும் பொறுப்பு முழுவதையும் மத்திய அரசு எடுத்துக் கொண்டுவிட்டது. நமக்கு எந்தவிதமான பொறுப்பும் கிடையாது. அண்மையில் அந்த அமைச்சரவை அறிவித்தபடி இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளாக உற்பத்தி தொடங்கும் என்று அறிவித்திருக்கிறார்கள். எப்போது தொடங்கும், என்ன முயற்சிகள் எடுக்கப் படும் என்ற விவரங்கள் எல்லாம் இங்கு தெரிவிப்பது சரியல்ல என்று கருதுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த நிறுவனத்திற்கு பிராடக்ட் மிக்ஸ் பற்றி நிபுணர் அறிக்கை வந்ததா ? அது சம்பந்தமாக நமது அரசாங்கத்திற்குத் தகவல் உண்டா ? எப்போது இயங்கும் என்பதற்கு வேறு ஏதாவது விவரங்கள் தர முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றிய ஏராளமான விவரங்களை வெளியிட்டால் மாநில அரசு மத்திய அரசு முரண்பாடு வெளிப்படும். நமக்கு வந்த தகவல்படி ஸ்டெய்ன்ஸ்லெஸ் ஸ்டீல் 70,000 டன்; சிலிகன் 75,000 டன்; ப்ரி கார்பன் 30,000 டன்; மைல்டு ஸ்டீல் 20,000 டன்; உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, even though the State Government are not able to give other details, may I know whether they are being consulted by the Central Government at every stage and whether the Central Government have taken the State Government into their confidence and whether the Minister for Industries has been consulted by his counterpart in the Centre?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசு மாநில அரசை அப்போதைக்கப்போது இதுபற்றிக் கலந்து விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. டில்லியில் விவாதம் நடைபெறுகிறபோது நம்முடைய செயலாளர் அவர்கள் அழைக்கப்படுகிறார்கள். பிராடக்ட் மிக்ஸ் பற்றி முடிவு செய்யும்போதும், நில அர்ஜிதம் சம்பந்தமாகவும், மற்றச் சமயங்களிலும் மாநில அரசை அப்போதைக்கப்போது கலந்து பேசுகிறார்கள். சேலத்தில் நடைபெறுகிற இந்த நிறுவனத்தில் மாநில அரசின் பிரதிநிதி இருக்க வேண்டும். அப்போதுதான் நிர்வாகம் நடைபெறமுடியும், விரைவாக நடைபெற முடியும் என்ற ஆலோசனையைத் தெரிவித்திருக்கிறோம்.